<u>கூடுதல்  மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>

அசல் வழக்கு  எண்.  202/2020

இன்று 2024 ம் ஆண்டு  ஆகஸ்டு திங்கள் 27 ம் நாள் இன்று இந்த  வா.சா.1ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. A.சுபஸ்ரீ,L.L.M., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | : | லோகநாதன் |
| தந்தை பெயர் | : | குழந்தைய |
| வயது | : | 58 |
| தொழில் | : | |

<u>முதல் விசாரணை</u>

நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் கூறியுள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும்.  அவை நான் கூறியவை தான்.  அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள கோருகிறேன். கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பில் குறியீடு செய்யக் கேட்டுக் கொள்கிறேன்.

1. 15.06.1998–ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டது.

2. 13.08.2020 –ம் தேதியிட்ட வில்லங்க சான்றிதழ் கணினி நகல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டது.

3.10.03.2010 ம் ேதியிட்ட கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ,3 ஆக குறியீடு செய்யப்பட்டது.

4.16.05.2011–ம் தேதியிட்ட விடுதலைப்பத்திரம் பத்திரம் சான்றிட்ட நகல்  வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டது.

5. அ.வ.388/2014–ல் வழக்குரை சான்றிட்ட நகல் வா.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்பட்டது.

6. அ.வா.388/2014–ல் தாக்கல் செய்யப்பட்ட சமாதான குறிப்பாணை சான்றிட்ட நகல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டது.

தாவாப்படி உத்தரவாக கேட்டுக் கொள்கிறேன்.

1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. நான் 6ம் வகுப்பி படித்துள்ளேன். வழக்கு சங்கதிகள் எனக்கு முழுவதும் எனக்கு தெரியும் . வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு 01.08.2020 ம் தேதியில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி உள்ளேன் என்றால் சரிதான். அதற்கு எனது தம்பி விஸ்வநாதன் 03.08.2020- ல் பதில் கொடுத்திருக்கிறார் எனறால் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் வழக்கறிஞர் அறிவிப்பி நான் சொல்லி அனுப்பட்டதா அல்லது வழக்கறிஞர் தனிச்சையாக அனுப்பியதா என்றால் நான் சொல்லி மான் அனுப்பப்பட்டது. **01.08.2020 ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அசல் பி. வா.சா.ஆ,1 ஆக குறியீடு செய்யப்பட்டது.** மேற்படி விவரத்தை வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனக்கு ஆங்கிலம் படிக்க தெரியாது.

2. 1ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர் வாதம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது பிராமண வாக்குமூலத்தில் மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பு பற்றிய விபரத்தை சொல்லவில்லை. செட்டிபாளையம் கிராமம் கஸ்பா குலிக்காட்டில் வசிக்கும் லேட் குழந்தையப்ப கவுண்டர் மகன் லோகநாதன், கந்தசாமி , விஸ்வநாதன், என்றால் நாங்கள் அண்ணன் தம்பி 3 பேர் தான். நாங்கள் 15.06.1998-ல் பாகப்பிரிவினை செய்து கொண்ட பிறகு 11.07.1998-ல் ஒரு ஒப்பந்தப் பத்திரம் எழுதிக்கொண்டோம் என்றால் சரிதான். பாகப்பிரிவிணைக்கு பின்னிட்டு 3 பேரும் சேர்ந்து பஞ்சாயத்தி பேசி மேற்கோட்டில் எனக்கும் கந்தசாமிக்கு நடுவிலும் கிழக்கோட்டில் விஸ்வநாதனுக்கு என்று பேசிமுடித்து கொண்டோம் என்றால் சரிதான். பேசிமுடித்த பிறகு அதனை எனது பெயரில் பத்து ரூபாய் முத்திரைத்தாள் பெற்று பத்திரம் தயார் செய்து 3 பேரும் கையொப்பம் மிட்டு நோட்டரி வழக்கறிஞர் முன்பு பதிவு செய்தோம் என்றால் சரிதான்.

3. பஞ்சாயத்துக்கு பின்னிட்டு எனக்கு மேற்கோட்டில் வீடும் நடுவில் கந்தசாமிக்கு வீடும் கிழக்கே விஸ்வநாதனுக்கு காலி வீடும் இருந்தது என்றால் சரியல்ல. நடுவில் இருந்த வீட்டை விஸ்வநாதன் வேண்டும் என்று கேட்டதால் அதனை அவருக்கும் காலியிடத்தை கந்தசாமிக்கும் ஒதுக்கினோம். எனது 40 செண்ட் இடத்திற்கு மேல்புறம் காணம் பாளையம் செல்லும் இடத்தில் தார் ரோடு உள்ளது என்றால் சரிதான். தென் புறத்தில் செட்டிபாளைம் செல்லும் கிழமேல் தார் ரோடு உள்ளது என்றால் சரிதான் எனக்கு வந்த பாகத்தில் இருந்த வீட்டை இடுத்து விட்டு எத்தனை கடைகள் கட்டியுள்ளேன். என்றால் நான்கு கடைகள் கட்டியுள்ளேன். எனக்கு அடுத்தது விஸ்வநதான் கடை கட்டியுள்ளார் எத்தனை கடைகள் என்று எனக்கு தெரியாது. அதற்கு அடுத்தது கந்தசாமி நான்கு கடைகள் கட்டியுள்ளார். மேற்படி கடைகள் அனைத்தும் 5அடி அகலம் உள்ள வாய்க்காலில்தான் கட்டியுள்ளோம் என்றால்

சரியல்ல.

4. எனது கடைக்கு நேர் வடபுறம் எனது வீடு உள்ளது என்றால் சரிதான். அந்த வீட்டிற்கு கிழபுறம் பொதுக்கிணறு உள்ளது என்றால் சரிதான். எனக்கு 6 தென்னை மரங்கள் உள்ளது. 50 தென்னை மரங்களுக்கு செட்டு நீர் போட்டுள்ளேனா என்றால் வாய்க்காலில் தண்ணீர் இல்லாததால் செட்டு நீர் போட்டுள்ளேன். கந்தசாமி அவருடைய இடத்தில் பில்டிங் ஒர்க்ஷாப் , கார் ஒர்க்ஷாப் செண்டரிங் கடை வைத்துள்ளார் என்றால் சரிதான். அதற்கு கிழபுறம் ரவிச்சந்திரனின் இடம் உள்ளது.மேற்படி ரவிச்சந்திரம் இடத்திற்கு கிழபுறத்தில் விஸவநாதன் இடம் உள்ளது. எனது தாயாருக்கு அவருடைய காலத்தில் பாகப்பிரிவிணை மூலம் ஒரு சொத்து வந்தததது என்றால் சரிதான். என்னுடைய தாயார் நடக்க முடியாமல் இருந்த காலத்தில் விஸ்வநாதன் தான் பராமரித்து வந்தார் என்றால் எனது தாயார் நல்லநிலையில் தான் இருந்தார். முதல் 15 வருடம் எனது வீட்டிலும் அதன்பிறகு விஸ்வநாதன் வீட்டில் இருந்து வந்தார்,

5. எனது தாயார் அவருக்கு பாகப்பிரிவுனை மூலம் கிடைத்த சொத்தை விஸ்வநாதனின் மகன்களுக்கு எழுதிவைத்து விட்டார் என்றால் சரிதான். அதன் பிறகு எனக்கும் எனது தம்பிக்கும் பேச்சுவார்த்தை இல்லை. எனது தாயார் 3 வருடங்களுக்கு முன்பு இறந்து விட்டார். வழக்கில் சொல்லியுள்ளது போல் எவ்வித சம்பவமும் நடக்கவில்லை என்றும் எனது தாயார் எனது தம்பி மகனுக்கு சொத்து எழுதிவைத்தால் கால்புணர்ச்சி காரணமாக உண்மைக்கு சங்கதிகளின் அடிப்படையில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆகையால் தான் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு அனுப்பபட்ட வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் பதில் அறிவிப்பு பற்றி விபரங்களை நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 7, 8 வருடங்களுக்கு முன்பு வாய்க்காலில் தண்ணீர் ஒட்டும் பழக்கம் இல்லை என்றும் ஆகையால் வழக்கில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. 11.07.1998–ம் தேதியிட்ட ஒப்பத்ததை பற்றி சொல்லாமல் உண்மையை மறைத்து இவவழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

ஒப்பம் திருமதி, A.சுபஸ்ரீ,L.L.M,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.